**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.187/2023

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | கல்யாண்குமார் |
| Father's Name | : | துரைராஜ் என்ற மாடசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.11.2025.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதியாவேன். . என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 13.02.2020 தேதியில் பிரதிவாதிக்கு உபயவாதிகளின் தகப்பனார் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 10.03.2020 தேதியில் வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 10.03.2020 உபயவாதிகள் அக்கிரிமெண்ட் என்ற தலைப்புக்கு எழுதிக்கொண்ட பதிவு செய்யப்படாத ஆவணம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வா.சா.ஆ.3 பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்ப்படுகிறது. மேற்படி ஆட்சேபனை இறுதிவிசாரணையின் போது முடிவு செய்யப்படும்)

4. பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய நோட்டிஸ் அலுவலக கை நகல் அத்துடன்இணைக்கப்பட்டுள்ள அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. மேற்படி நோட்டிஸ்க்கு பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.